**<u>சார்பு நீதிமன்றம், அரூர்</u>**

**<u>நாள் – 10.02.2025</u>**

**OS.224/2019**

**வா.சா.1 திரு.சிகாமணி**

**வா.சா. 1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

1. தாவா சொத்து விவரத்தில் தெற்கு பக்கம் செக்குபந்தியாக இதே சர்வே எண்ணில் என்னுடைய கடை என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு தெற்கு பக்கம் உள்ள சொத்து 30.12.2011 ல் கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். தாவா சொத்தானது என்னுடைய வேறு கடைக்கு வடக்கு பக்கம் தான் உள்ளது என்று சொன்னால் சரிதான். நான் கிரையம் பெற்ற வா.சா.ஆ.2 கிரைய பத்திரத்தில் செக்குபந்தியில் வா.சா.ஆ.1ல் கிரையம் பெற்ற தாவா சொத்திற்கு தெற்கு என்று எழுதப்படவில்லை என்றாலும், அது பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட கட்டிடத்திற்கு தெற்கு என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் பத்திரப்பதிவில் அது காண்பிக்கப்படவில்லை.

2. பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டட சொத்தை எனது தகப்பனார் சாமிக்கண்ணு தேவருக்கு பொது அதிகார பத்திரம் மூலம் பாத்தியப்பட்டதாக தெரிவித்து மோசடியாக கிரையபத்திரம் தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு தெற்கில் உள்ள சொத்தாக என்னுடைய கடை என்று காட்டப்பட்டுள்ளது அது என்னுடைய அனுபோகத்தில் உள்ளதா என்றால் என்னுடைய அனுபோகத்தில் இல்லை, பிரதிவாதி அனுபோகமத்தில் உள்ளது அதற்காகத்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்திற்கு தெற்கில் உள்ள என்னுடைய கடையில் என்ன தொழில் செய்யப்படுகிறது

என்றால் கண் கண்ணாடி கடைக்கு வாடகைக்கு விடப்பட்டுள்ளது. எத்தனை வருடமாக வாடகைக்கு விட்டுள்ளேன் என்றால் கடந்த 3 வருடமாக. அதற்கு முன் யாருக்கு வாடகை விடப்பட்டது என்றால் அதற்கு முன்பு மளிகைக்கடை இருந்தது. மளிகைக்கடை எத்தனை வருடம் வைக்கப்பட்டிருந்தது என்றால் அது எனது தந்தைக்குத்தான் தெரியும்.

3. 2018 ல் நான் சொத்தை வாங்கிவிட்டதாக சொல்லியுள்ளேன், அந்த தேதியில் இருந்து யார் கடை வைத்திருந்தார் என்றால் நான் பத்திரம் மசெய்யும் போது மளிகை கடை இருந்தது, அதன் பின் கொஞ்சநாள் ஏதும் இல்லாமல் இருந்தது, அதன் பின் கண்கண்ணாடி கடை வைக்கப்பட்டிருந்தது. நான் சொத்தை 2018 ல் வாங்கியதாகவும், அப்போது மளிகை கடை இருந்ததாகவும் சொல்லியுள்ளேன் எவ்வளவு காலம் அந்த மளிகை கடை இருந்தது என்றால் 2019 ல் இருந்து கொரோனா ஆரம்பித்து முடியும் வரை இருந்தது. யார் மளிகை கடையை வைத்திருந்தார்கள் என்றால் ராஜா என்ற பெயரில் மளிகைகடை வைத்திருந்தார் அவரை ராஜா என்று தான் அழைப்போம். எனக்கும் அந்த மளிகை கடை வைத்திருந்த ராஜா என்பவருக்கும் விரோதம் ஏதும் இல்லை என்றால் சரிதான்.

4. நான் கிராமத்தில் குடியிருந்ததை பயன்படுத்திக்கொண்டு பிரதிவாதி தாவா சொத்தை தன்னுடைய மேற்குபக்கம் உள்ள கடையுடன் இணைத்துக்கொண்டார் என்று சொல்லியுள்ளேன், நான் குடியிருக்கும் பகுதிக்கும் தாவா சொத்திற்கும் சுமார் 2 கிலோமீட்டர் இருக்கும் என்றால் சரிதான். நான் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறேன் என்றால் சரிதான், வே.விளாம்பட்டியில் பணிபுரிகிறேன். தாவா சொத்தை பிரதிவாதி ஆக்கிரமிப்பு

செய்துள்ளதாக சொல்லியுள்ளேன் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதாக சொல்லியுள்ள இடத்தில் என்னபொருள் இருந்தது என்றால் அங்கு எந்த பொருளும் இல்லை. அந்த ஆக்கிரமிப்பு செய்யப்பட்டதாக சொல்லும் இடத்தில் என்ன இருந்தது என்றால் எனக்கு தெரியாது, எனது அப்பாவுக்கு தான் தெரியும்.

5. 2011 ல் நான் கிரையம் பெற்ற சொத்திற்கும் தாவா சொத்திற்கும் மத்தியில் கிழமேலாக என்ன இருந்தது என்றால் சுவர் இருந்தது. பிரதிவாதி ஆக்கிரமிப்பு செய்ததாக சொல்லும் பொருட்டு அது குறித்து காவல் நிலையத்தில் புகார் ஏதாவது கொடுக்கப்பட்டதா என்றால் புகார் கொடுத்தேன், போலிசார் வந்து பார்வையிட்டு நீங்கள் RDO விடம் தான் மனு கொடுக்கவேண்டும் என்று சொன்னார்கள், நான் அதன் பிறகு RDO விடம் மனு கொடுத்தேன். நான் காவல்நிலையத்தில் புகார் கொடுத்ததற்கு அத்தாட்சி உள்ளதா என்றால் புகார் கொடுத்தேன் ஆனால் அத்தாட்சி ஏதும் கொடுக்கவில்லை. RDO விடம் புகார் கொடுத்தற்கு அத்தாட்சி உள்ளதா என்றால் புகார் கொடுத்த மனு நகல் உள்ளது. RDO விடம் புகார் கொடுத்ததற்காக மனு நகல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மனு கொடுத்ததற்கு RDO என்ன நடவடிக்கை எடுத்தார் என்றால் வந்து பார்த்தார்கள், எழுத்து மூலமான உத்தரவு ஏதும் பிறப்பிக்கவில்லை.

6. காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது, RDO விடம் மனு கொடுத்த விவரங்களை தாவாவில் சொல்லியுள்ளேனா என்றால் அது சொல்லவில்லை. பிரதிவாதி நான் சொன்னது போல 03.06.2019 ம் தேதி எந்த ஆக்கிரமிப்பும் செய்யவில்லை, அதனால் தான் காவல் நிலையத்திலும், RDO விடம் எந்த

புகாரும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வழக்கறிஞர் மூலமாக பிரதிவாதிக்கு ஏதாவது சட்ட அறிவிப்பு ஆக்கிரமிப்பு குறித்து அனுப்பினேனா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல தாவா சொத்து எனக்கு பாத்தியம் இல்லை என்றாலும், எனக்கு கிரையம் செய்து கொடுத்ததாக சொல்லும் எனது தந்தைக்கும், முன்பாத்தியஸ்தருக்கும் எந்தவிதமான பாத்தியதையும், சுவாதீனமும் இல்லை என்றால் சரியல்ல.

7. 2018 ல் வாங்கிய தாவாசொத்திற்கு நான் பட்டா வாங்கினேனா என்றால் கூட்டுபட்டா வாங்கினேன். நான் உண்மையில் கிரையம் பெற்று அனுபவத்தில் இருந்தால் நான் தனிப்பட்டா வாங்கியிருப்பேன் அவ்வாறு இல்லை என்பதால் தான் தனிப்பட்டா வாங்கவில்லை என்றால் சரியல்ல, நான் கூட்டுப்பட்டா பெற்றுள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்தில் முதல் பத்தியில் தாவா சொத்து கிரையம் பெற்று அனுபவத்தில் இருந்து வருவதாக சொல்லியுள்ளேன். அவ்வாறு அந்த சொத்து எனது அனுபவத்தில் இல்லை என்றால் கிரையம் பெற்ற நாள் முதல் என்னுடைய அனுபோகத்தில் இல்லை. எனது பிரமாண பத்திரத்தின் முதல் பத்தியில் 13.07.1994 ஆண்டு முதல் 7 நபர்களை குறிப்பிட்டு கிரையம் பெற்ற சொத்து என்றும் தெரிவித்துள்ளேன், அந்த சொத்துக்கும், தாவா சொத்துக்கும் சம்மந்தம் இல்லை என்றால் சரியல்ல.

8. நான் பிரமாண வாக்குமூலத்தில் பிரதிவாதி உள்ளூர் ஆட்கள் உதவியுடன் தாவாசொத்தை ஆக்கிரமிப்பு செய்ததாக சொல்லியுள்ளேன் அந்த ஊள்ளுர் ஆட்கள் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் அவர்கள் பெயரை குறிப்பிட்டும் புகார் கொடுத்தேன். பிரதிவாதிக்கு ஆதரவாக

செயல்பட்ட உள்ளூர் நபர்கள் மீது வழக்கு ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 20 ஆண்டுகளுக்கு மேலாக பிரதிவாதிக்கும் அவரது முன்பாத்திருக்கு பாத்தியப்பட்டு அவருடைய அனுபவத்தில் இருந்து வந்த சொத்து குறித்து மோசடியாக எனது தந்தையிடம் 2வதாக ஒரு கிரையபத்திரம் தயார் செய்து பொய்பாத்தியம் கொண்டாடி வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. டவுன் பஞ்சாயத்து அலுவலகத்தில் தாவா சொத்துக்கு நீலவரைபடம் கொடுத்ததாக சொல்வதும், அந்த சொத்திற்கு பட்டா பெறப்பட்டதாக சொல்வதும் என்னுடைய செல்வாக்கை பயன்படுத்தி மோசடியாக பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல.

9. தாவா சொத்து விவரமே தவறானது, அது சரியானது என்று நிரூபிக்க இதுநாள் வரை நீதிமன்ற ஆணையர் மூலம் அளிவீடு செய்யவேண்டும் என்றும், எந்த மனுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதியை அச்சுறுத்தி அக்கிரம லாபம் அடையவேண்டி அவர் மீது பொய்வழக்கு தாக்கல் செய்துள்ளேன் அதனால் அதிகபட்ச செலவுத்தொகையுடன் இந்த தாவா தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

Sd/-R.Vijayan,
Sub Judge, Harur